بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 6:7 ரபீஉல் ஆகிர், 1431 பக்கங்கள்=12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, Email: suvanam@gmail.com, www.suvanam.com

## நபி மூஸா(அலை) அவர்களும் ஆஷூரா நோன்பும்

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A*

நபியே! இவ்வேதத்தில் மூஸாவைப் பற்றியும் நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் மாசில்லாத (தூயவராக) இருந்தார். அவர் ரஸூலாகவும் நபியாகவும் இருந்தார். (ஸூரது மர்யம்:51)

நம்பிக்கை கொள்ளும் மக்களுக்காக நாம் மூஸாவுடையவும் ஃபிர்அவ்னுடையவும் வரலாற்றிலிருந்து உண்மையைக் கொண்டு, உமக்கு ஓதிக் காண்பிக்கின்றோம். (ஸூரதுல் கஸஸ்:3)

சர்வாதிகாரத்திற்கு சரித்தரம் படைத்தவன் என்றால் சந்தேகமில்லாமல் கூறலாம்! அவன் 'பிர்அவ்ன்' என்று, அந்த அளவுக்கு அட்டகாசம் புரிந்து வந்தான் இவ்வுலகில், மிஸ்ரை (எகிப்தை ஆட்சி செய்து வந்த பிர்அவ்ன் அம்மக்களுக்கு அநியாயம், அக்கிரமம், அடக்குமுறை, சித்தரவதை, என்று கொடுமை பல செய்து வந்தான். இன்னும் இவ்வுலகிற்கு அதிபதி என்றும் 'ரப்பு' என்றும் கூறிவந்தான். பிர்அவ்ன் மிஸ்ரில் வாழ்ந்து வந்தவர்களை கிப்தி, பனு இஸ்ராயீல் என்று இரு பிரிவினர்களாக்கி ஆட்சி புரிந்து வந்தான். இதில் கிப்தியர்கள் பிர்அவ்னின் கூட்டத்தார்களாகவும், பனூ இஸ்ராயீலர்கள் யாகூப் (அலை) அவர்களின் சந்ததியினர்களும் ஆவார்கள். யாகூப்(அலை) அவர்களின் தந்தை இஸ்ஹாக்(அலை) ஆவார்கள், இஸ்ஹாக்(அலை) அவர்களின் தந்தை இப்ராஹீம்(அலை) ஆவார்கள். பிர்அவ்ன் பனூ இஸ்ரயீலர்களை கடுமையான முறையில் வேலைகள் செய்ய தூண்டியும், தண்டித்தும், இழிவு படுத்தியும் வந்தான். அச்சமயத்தில் தன் ஆட்சியை பிடிப்பது

*தொடர்ச்சி 7 ம் பக்கம் பார்க்க ...*

### உள்ளே!

உணவளிப்பதும் உடை வழங்குவதும் - 5

காய்களின் மகத்துவம் - 8

இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் - 9

நான் ஏன் இஸ்லாத்தை ஏற்றேன் - 11

இறை நினைவுகள் - 12

அறிவுப் போட்டி - 12

## அரசியலில் முஸ்லீம்கள் ஓரங்கட்டப்படுவதேன்?

சுவனப்பாதை மாத இதழ் நடத்திய உலகளாவிய எழுத்துப் புரட்சி போட்டியில் (ஹிஜ்ரி 1430) இரண்டாவது ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை

*- .முஹம்மது அமீன், அபுதாபி, ஐக்கிய அரபு அமீரகம்*

முதலாவதாக முஸ்லீம்களின் சர்வதேச அரசியலை ஆய்வோமேயானால் அவர்களின் பிரச்சனைகளை ஒரு பாராவுக்குள் அடக்கிவிடலாம். ஆட்சி, அதிகாரம், செல்வம், இராணுவம், ஆயுதங்கள், ஏகப்பட்ட முஸ்லீம் நாடுகள் என குவிந்திருந்தாலும் சுமார் 50 ஆண்டுகாலமாக பெட்ரோலிய செல்வம் பெருகியவுடன் தங்களின் அரசியல் உணர்வுகளை பகட்டுக்கும் ஆடம்பரத்திற்கும் அடகு வைத்து விட்டார்கள். அதை இழக்க மக்களும் தயாராக இல்லை அரசர்களும் மக்கள் அந்த அற்ப மாயையிலிருந்து விடுபடுவதை விரும்புவதில்லை ஜனநாயக ஆட்சியாளர்களின் கதியும் இதுதான் ஏனென்றால் அவர்கள் விழிக்க நினைத்தாலும் சரி அவர்களை ஆட்டுவிக்கும் கொடியவர்கள் சினந்தாலும் சரி,

(நபியே!) நீர் கூறுவீராக: 'அல்லாஹ்வே! ஆட்சிகளுக்கெல்லாம் அதிபதியே! நீ யாரை விரும்புகிறாயோ அவருக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய் இன்னும் ஆட்சியை நீ விரும்புவோரிடமிருந்து அகற்றியும் விடுகிறாய் நீ நாடியோரை கண்ணியப்படுத்துகிறாய் நீ நாடியவரை இழிவு படுத்தவும் செய்கிறாய் நன்மைகள் யாவும் உன் கைவசமேயுள்ளன அனைத்துப் பொருட்கள் மீதும் நிச்சயமாக நீ ஆற்றலுடையவனாக இருக்கின்றாய்.' (அல்குர்ஆன் 3:26)

என எச்சரித்திருந்தும் பதவி போய்விடும் என்ற அல்லாஹ்வை மறந்த நடுக்கமே அவர்களை சக முஸ்லீம் அல்லது ஒரு முஸ்லீம் நாடு பயங்கரவாத வல்லரசு நாடுகளால் குதறப்படும்போது தள்ளி நின்று வேடிக்கை பார்க்கத் தூண்டுகிறது. அற்பப்பதவிகளை காப்பற்றிக் கொள்ள இப்படி அவர்கள் தள்ளி நிற்பதுமே சர்வதேச அரசியலில் ஒரங்கட்டப்படுவதன் முக்கிய காரணிகளாகும் என்ற அளவில் நிறுத்திக் கொண்டு இனி நம் இந்தியாவின் உள் செல்வோம்.

இந்தியாவில் முஸ்லீம்கள் இஸ்லாத்தை அதன் தூய வடிவில் போதிக்கத் தவறிய, குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் இஸ்லாமிய ஆட்சியை நிறுவத் தவறிய முஸ்லீம் ஆட்சியாளர்களிடமிருந்து என இருநிலைகளில் இக்குறை இந்தியாவில் துவங்குவதாக எடுத்துக் கொள்ள வேண்டும். முதல் நிலையான தஃவா நம்மிடமிருந்து சரியான முறையில் பிற மத

மக்களை சென்றடையவில்லை என்பதே உண்மை. இந்தியாவில் காணப்படும் பிற மத வர்ணாசிர கலாச்சார நிலையானது இஸ்லாத்தை அந்த ஒடுக்கப்பட்ட மக்கள் எளிதில் ஏற்கச் செய்திருக்க வேண்டும் ஆனால் நாம் இஸ்லாத்தை நம்முடைய பெயருடன் நிறுத்திக் கொண்டதன் விளைவு நம்மை ஓரங்கட்டும் அரசியல், நம் அழைப்புப்பணியின் பிரதான இலக்காக கொள்ள வேண்டியவர்களை கொண்டே நம்மை நசுக்குகின்றது. நம் மீது சுமத்தப்படும் பழிகளை உண்மையென அவர்களை நம்பச் செய்கிறது.

'எங்கள் இறைவனே! உங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்று ஈமானின் பக்கம் அழைத்தவரின் அழைப்பைச் செவிமடுத்து நாங்கள் திடமாக ஈமான் கொண்டோம் 'எங்கள் இறைவனே! எங்களுக்கு, எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! எங்கள் தீமைகளை எங்களை விட்டும் அகற்றி விடுவாயாக இன்னும், எங்க(ளுடைய ஆன்மாக்க)ளைச் சான்றோர்களு(டைய ஆன்மாக்களு)டன் கைப்பற்றுவாயாக!' (அல்குர்ஆன் 3: 193)

என பிரார்த்தித்திருக்க வேண்டிய ஒடுக்கப்பட்ட மற்றும் ஆதிவாசிகளிடம் கூட நம் மார்க்கத்தை கொண்டு சேர்க்கத் தவறியதன் பலனை செய்யாத குற்றத்திற்காக மோடியின் குஜராத்தில் கோத்ரா ரூபத்தில் அனுபவித்தோம் என்பது ஒரு சோற்று உதாரணம்.

அனஸ்(ரலி) அறிவித்தார்கள்: (ஒருமுறை) நபி (ஸல்) அவர்கள், உன் சகோதரன் அக்கிரமகாரனாக இருக்கும் நிலையிலும் அக்கிரமத்துக்குள்ளானவனாக இருக்கும் நிலையிலும் அவனுக்கு உதவி செய் என கூறினார்கள். மக்கள் இறைத்தூதர் அவர்களே, அக்கிரமத்துள்ளனாவனுக்கு நாங்கள் உதவுவோம். அக்கிரமகாரனுக்கு நாங்கள் எப்படி உதவ முடியும்? என விளக்கம் கேட்டார்கள். நபி(ஸல்) அவர்கள், அவனுடைய கைகளைப் பிடித்து (அக்கிரமம் செய்ய விடாமல் தடுத்துக்) கொள்வாயாக, (இதுவே அவனுக்கு செய்யும் உதவி) என்று கூறினார்கள். (புஹாரி 2444) என்ற ஹதீஸின் அடிப்படையில் அக்கிரமக்காரர்களுக்கும் உதவும் வகையில் இஸ்லாத்தை அதன் தூய வடிவில் குர்ஆன் ஹதீஸ் ஒளியில் அனைத்து தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்க்க தஃவாவை முன்னெடுத்துச் செல்வோமேயானால் அரசியலை நம்மிடமிருந்து ஓரங்கட்டியவர்கள் ஓரங்கட்டப்படும் நிலை இன்ஷா அல்லாஹ் உருவாகும் என்ற நம்பிக்கையுடன் இரண்டாம் நிலை குறித்து சற்று விரிவாக காலங்களால் அளந்து பார்ப்போம்.

(நபியே!) அவர்களில் அநேகர் காஃபிர்களையே உற்ற நண்பர்களாகக் கொண்டிருப்பதை நீர் காண்பீர் அவர்கள் தமக்காக முற்கூட்டியே அனுப்பி வைத்தது நிச்சயமாக கெட்டதேயாகும் ஏனெனில் அல்லாஹ்வின் கோபம் அவர்கள் மீதுள்ளது மேலும் வேதனையில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். (அல்குர்ஆன் 5: 80)

என்ற வசனத்தை அலட்சியம் செய்து விட்டு எப்போது பிற மத மக்களை தங்களின் பிரதான அமைச்சர்களாகவும் ஆலோசகர்களாகவும் ராணுவத் தளபதிகளாகவும் பிற மத இளவரசிகளை மனைவிகளாகவும் இந்தியாவை ஆண்ட அன்றைய முஸ்லீம் அரசர்கள் சுவீகரித்துக் கொண்டார்களோ அன்றே முஸ்லீம்களின் அரசியல்பாதை அடைபடத் துவங்கிவிட்டது.

ஆங்கிலேயர் காலத்தில் விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் நம்மை நாமே வனவாசத்தில் தொலைத்ததும் வரலாற்றுத் தவறு. சிந்திக்கும் மக்களின் மீது இஸ்லாம் ஏற்படுத்தும் தாக்கங்களையும் முஸ்லீம்களின் வீரியத்தையும் அறிந்திருந்த ஆங்கிலேயர்கள் மற்றும் அதன் ஒட்டுண்ணிகள் விரும்பிய ஓரங்கட்டப்படல்கள், இன்றைய நிலையை அடையவே முஸ்லீம்களின் அன்றைய அரசியல் ரீதியான சுய புறக்கணிப்புகள் உதவிற்று.

ஆங்கிலேயரின் காலத்தில் முஸ்லீம்கள் புறக்கணிப்பால் ஏற்பட்ட வெற்றிடைத்தை தான் இன்றும் இந்தியாவில் சுமார் 2 முதல் 3 சதவிகிதமே வாழும் ஆதிக்க பிராமண சமூகத்தினர் பயன்படுத்திக் கொள்ள துவங்கினர். கிடைத்த துறைகளில் கிடைத்த வாய்ப்புகளில் தங்கள் சமூகத்தினரை கொண்டு நிரப்பத் துவங்கி அதில் முழு வெற்றியும் பெற்றுள்ளனர். இப்படி அவர்கள் ஒவ்வொரு துறையிலும் ஊடுருவியதன் பயன் இன்று இந்திய ராணுவ அதிகாரிகள் முதல் சன்னியாச வேடம் தரிக்கும் பெண் தீவிரவாதிகள் வரை முஸ்லீம்களுக்கெதிரான கொடூரங்களை நிகழ்த்தி விட்டு அதை முஸ்லீம்கள் மீதே பழியாக சுமத்தவும் முடிகிறது. அதுபோல் ஆட்சியாளர்கள் அவ்வப்போது முஸ்லீம்களின் நிலையை ஆராய சச்சார் போன்ற கமிஷன்களை அமைத்து விட்டு அதன் நியாயமான பரிந்துரைகளை குப்பையில் வீசும் தைரியத்தையும் பெறுகின்றனர்.

இந்திய அரசியலில் தாங்கள் ஆட்சியில் இருந்தாலும், இந்து சமூகத்தின் பிற வகுப்பினர், பிற கட்சியினர் ஆட்சி செலுத்தினாலும் அதன் குடுமியை யூதர்களைப் போல் தங்கள் கட்டுக்குள் வைத்துக் கொண்டுள்ளனர் பிராமண சமூகத்தினர். இதன் உதாரணங்கள் தான் பிராமண ஆதிக்கங்களை எதிர்த்து தோற்றுவிக்கப்பட்ட திமுக, பகுஜன் சமாஜ் போன்ற கட்சிகளின் சரணாகதிகள்.

சென்னை: திமுக கொள்கை ரீதியாகத்தான் பிராமணர்களுக்கு எதிராக உள்ளது. ஆனால் ஒருபோதும் அவர்கள் பிராமணர்களை வெறுத்ததில்லை. முதல்வர் கருணாநிதி, துணை முதல்வர் மு.க.ஸ்டாலின், ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதி மாறன் ஆகியோரின் ஆலோசகர்கள் அனைவருமே பிராமணர்கள்தான். உண்மையில் பிராமணர்களை மதிக்கும் கட்சி திமுக என்று கூறியுள்ளார் அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட மைலாப்பூர் எம்.எல்.ஏ எஸ்.வி.சேகர். அதிமுகவிலிருந்து நீக்கப்பட்டுள்ள அவர் ஒரு இணையத் தளத்திற்கு அளித்துள்ள பேட்டி...

### மாயாவதி போல் கருணாநிதி செயல்பட வேண்டும்...

திமுகவில் சேருவது குறித்து நான் சிந்திக்கவே இல்லை. தமிழகத்தைப் பொறுத்தவரை முற்பட்ட வகுப்பினருக்கு நியாயம் கிடைக்கவே கிடைக்காது. அந்த வகையில் மாயாவதி, சமூக மாற்றத்தை புதிய அணுகுமுறையில் தொடங்கி வைத்துள்ளார். பிராமணர்களின் வாக்குகளை அவர் கவர்ந்துள்ளார்.

அதேபோல முதல்வர் கருணாநிதியும் செய்ய வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன்.

(நன்றி : தட்ஸ்தமிழ் இணையதளம் - ஆகஸ்ட் 28 - செய்தி சுருக்கம்)

படித்தால் அரசாங்கம் என்ன முஸ்லீம்களுக்கு வேலையா தரப் போகிறது? என்ற மனப்பான்மையில் பாஸ்போர்ட்டை தூக்கி கொண்டு அரபு நாட்டுக்கு இன்றைய இளைஞர்கள் ஓடுவதைப்போல இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாகத் திகழ்ந்த ஜின்னா தலைமையிலான முஸ்லீம் லீக் கட்சி பல தொகுதிகளில் வெற்றிபெற்றும் கூட அதிகாரம் செலுத்த முடியாத, ஆட்சியில் பங்குபெற முடியாத பரிதாபகரம் முஸ்லீம்களின் அரசியல் விரக்தி ஓட்டத்திற்கு அச்சாரமிட்டு சென்றது என்றால் அது மிகையல்ல.

சி.என்.என் - ஐ.பி.என் தொலைக்காட்சியில் கரன் தாப்பரின் 'டெவில்ஸ் அட்வகேட்' நிகழ்ச்சியில் ஜஸ்வந்த் சிங் அளித்துள்ள பேட்டியின் சில முக்கிய பகுதிகள்...

1946ல் நடந்த தேர்தலில் ஜின்னாவின் முஸ்லீம் லீக் கட்சி அனைத்து முஸ்லீம் தொகுதிகளிலும் வென்றது. ஆனால் அவர்களால் ஆட்சியில் அமர முடியாத நிலை. காரணம், காங்கிரஸ் கட்சி ஒரு முஸ்லீம் வேட்பாளரைக் கூட நிறுத்தாமல் பெரும்பாலான இடங்களில் வென்றிருந்தது. எனவே முஸ்லீம் லீக்கால் ஆட்சியில் இடம் பிடிக்க முடியவில்லை. அப்போதுதான் அவர் தேர்தலில் நின்றால் மட்டும் போதாது என்பதை உணர்ந்தார். முஸ்லீம்களுக்கும் ஆட்சியில் அதிகாரம் வேண்டும் என்பதை காங்கிரஸுக்கும் உணர்த்தினார். இதையடுத்தே இடஒதுக்கீடு உத்தரவாதம் தரப்பட்டது. முதலில் 25 சதவீதம் என்று அறிவிக்கப்பட்ட இட ஒதுக்கீடு பின்னர் 33 சதவீதமாக உயர்ந்தது. ஆனால் இது சரிவர கடைப்பிடிக்கப்படவில்லை. பாரபட்சம் காட்டப்பட்டது, இதுதான் நாடு பிளவுபடக் காரணமானது. (நன்றி : தட்ஸ்தமிழ் இணையதளம் - ஆகஸ்ட் 19 - செய்தி சுருக்கம்)

நாடு பிளவுபட்ட பின், இந்தியாவிற்குள் கைவிடப்பட்ட நிலையிலிருந்த, சுதந்திரத்திற்காக உயிரை பணயம் வைத்து போராடிய முஸ்லீம்கள் தங்களின் ஜனநாயக உரிமைக்கு கூட குரல் எழுப்ப பயந்து குற்ற உணர்வு எனும் தேவையற்ற சிறைக்குள் இன்றைய முஸ்லீம் சமுதாயத்தை விட்டுச் சென்றுள்ளனர்.

விடுதலை இந்தியாவிற்குள் எஞ்சிய முஸ்லீம் லீக்குகள் எதிர்க்கட்சியாய் இருந்தும் முஸ்லீம்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தத் தவறியதன் விளைவு இன்று பலதரப்பட்ட லீக்குகள் முளைத்திருக்கின்றனவே தவிர அவற்றால் சமுதாயத்தை ஒன்றிணைக்கவோ கடுகளவு நன்மைகள் செய்யவோ முடியவில்லை. ஏன் தன் கூட்டணித் தலைமையுடன் உரிமையுடன் பேசி தங்கள் கட்சிக்காக எதையும் கேட்க முடியாமல் தூக்கிப் போடுவதை மனதிருப்தியுடன் பெற்றுக் கொண்டதாகவும் வேட்பாளரைக் கூட கூட்டணித் தலைவரே தீர்மானிப்பதையும் ஏற்று மானங்கெட்டு அறிவிக்கிறார்கள்.

அவர்களாக பார்த்து தருகின்ற ஒரு சில சீட்டுகளுடன் நம் சமுதாய கட்சிகளை முடக்கி போட்டு வைத்திருந்தன திராவிட, தேசிய கட்சிகள் அதிலும் மிக கவனமாக முஸ்லீம்களுக்கு ஓர் இடம் கூட அதிகம் கிடைத்து விடக்கூடாது என்று ஒரு முஸ்லீம் போட்டியிடும் தொகுதியிலேயே தான் இன்னொரு முஸ்லீமை மோதவிடுவார்கள், முஸ்லீம்களின் சுரணையின் மீது அவ்வளவு நம்பிக்கை. தடா, பொடா என்ற அடக்குமுறைகளை தொடர்ந்து ஏற்பட்ட கட்டாய உறக்கக் கலைவால் கல்வி, அரசியல் மற்றும் வேலைவாய்ப்பில் முஸ்லீம்களுக்கு தனியிட ஒதுக்கீடு வேண்டும் என்ற கோஷம் மூலம் அரசியலில் ஒரங்கட்டப்பட்டுள்ளதை உணரத் தலைப்பட்டனர் தமிழக முஸ்லீம்கள். இந்த கோஷங்களை ஏற்காத இஸ்லாமிய இயக்கங்களும், குர்ஆன், சுன்னாவின் கட்டளைகளை ஒற்றுமைக்கு எதிரான சிறிய விஷயங்கள் என உதாசீனப்படுத்தி விட்டு கனவில் இஸ்லாமிய ஆட்சியை உருவாக்க நினைக்கும் இயக்கங்களும், நமக்கேன் வம்பு நிலையினரும், பரம்பரை கட்சிப் பைத்தியங்களும் கூடவே முட்புதர்களாய் வளர்ந்தார்கள்.

அன்றியும் நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடவுங்கள், மேலும் உங்களுக்குள் பிணங்கிக் கொள்ளாதீர்கள். அவ்வாறாயீன் நீங்கள் தைரியத்தை இழந்துவிடுவீர்கள் மேலும் உங்கள் வலிமை குன்றிவிடும் ஆகவே நீங்கள் பொறுமையாக இருங்கள். நிச்சயமாக அல்லாஹ், பொறுமையுடையோர்களுடன் இருக்கின்றான். (அல்குர்ஆன் 8: 46) என்ற வசனத்தின் மூலமும்

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : இறை நம்பிக்கையாளர்கள் ஒருவருக்கொருவர் (துணை நிற்கும் விஷயத்தில்) ஒரு கட்டடத்தைப் போன்றவர்கள் ஆவர். அதன் ஒரு பகுதி மற்றொரு பகுதிக்கு வலுவூட்டுகிறது. (இப்படி கூறியபோது) நபி (ஸல்) அவர்கள் தங்களின் கை விரல்களை ஒன்றோடொன்று கோர்த்துக் காண்பித்தார்கள் என அபூமூஸா(ரலி) அவர்கள் அறிவித்தார்கள். (புஹாரி 2446) என்ற ஹதீஸின் மூலமும் எச்சரிப்பது ஆளுக்கொரு இயக்கம் காணவா? அல்லது ஒவ்வொரு இயக்கமும் நபி(ஸல்) அவர்கள் கூறிய கட்டடத்தின் ஒவ்வொரு செங்கல் என சிம்பாளிக்காக உணர்த்த வருகிறார்களா? தேவைக்கு அதிகமாகவே நிறைந்து காணப்படும் இஸ்லாமிய இயக்கங்கள் தங்களின் வலுவை அரசியல் தலைவர்களுக்கும், பிற இஸ்லாமிய இயக்கங்களுக்கும் காண்பிக்கவே மெனக்கெடுகிறார்களே தவிர குறைந்த பட்சம் டிசம்பர் 6, தேர்தல்கள், கோவை சிறைவாசிகள், இஸ்லாத்திற்கு எதிரான இந்திய மற்றும் சர்வதேச சீண்டல்கள் போன்ற பொதுப் பிரச்சனைகளிலாவது ஒரு பொது திட்டத்தின் அடிப்படையில் ஒன்று சேர்கின்றார்களா என்றால் இல்லை.

அனைவரும் ஒன்று சேர்வது கூட சாத்தியமில்லை என்று ஒதுக்கினாலும் கூட குறைந்த பட்சம் 2 அல்லது 3 இயக்கங்கள் கூடவா ஒன்று சேர்ந்து குரல் எழுப்ப முடியாது? இந்த நல்ல முன்மாதிரி நாளை அனைவரும் ஒன்று சேர வழி வகுக்கலாம் அல்லவா? ம்..., நாம் தான் அந்தக் கால குறைஷிகள், குர்ஆனை செவிமடுக்காதீர் ரசூல் (ஸல்) அவர்கள் சொல்வதை கேட்காதீர் என சொன்னதைப் போல் அடுத்த இயக்கத்தவனுடைய பேச்சையே கேட்கக்கூடாது, எழுத்தை படிக்கவல்ல பார்க்கவேகூடாது என தலையில் இறுக ஆணி அறைந்து வைத்துள்ளோமே!

சரிவர நடைமுறைபடுத்தப்படாத 3.5 சதவிகித இட ஒதுக்கீடு மூலம் ஓரளவு வேலைவாய்ப்பு சாத்தியமானாலும் அரசியல் அதிகாரமென்பது பகற்கனவாக உள்ளது. இதை எட்டிப் பிடிக்கவும் தட்டிப் பறிக்கவும் நமக்குள்ளே தீராத சண்டைகள், வசவுகள் ஆனால் அறிக்கையில் மட்டும் சலுகைகளை வழங்கி விட்டு ஆட்சி கட்டிலிலிருப்போருக்கு அந்தக் கவலை இல்லை ஏனென்றால் தேர்தலுக்கு தேர்தல் மாறும் இஸ்லாமிய இயக்க விசுவாசிகளை கொண்டு தங்கள் நாற்காலிகளை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளனர்.

புரிந்து கொள்க! உலமாக்கள் நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்பது அனைத்து முஸ்லீம் இயக்கங்களின் கோரிக்கை, அது இன்று செயலுக்கும் வந்து விட்டது என்றாலும் பாருங்கள் களத்தில் இறங்கிய இயக்கங்களை அரசாங்கம் எந்த இடத்தில் வைத்துள்ளதென்று, ஏகத்துவம் பேசும் அல்லது சமுதாய பணியாற்றும் எந்த இயக்கத்துக்கும் சாதாரண உறுப்பினர் என்ற அந்தஸ்தை கூட தர மறுக்கும் தமிழக அரசின் அரசியல் நரித்தனம் புரியும். இயக்கங்களின் ஒற்றுமையால் விளைந்த நன்மை இது!

**தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:**

2009-2010ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் மாநிலத்தில் உள்ள பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் மத்ரஸாக்களில் உள்ள உலமாக்கள் மற்றும் பணியாளர்களுக்கென உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைத்து அரசு ஆணையிடுகிறது.

**அலுவல் சாரா உறுப்பினர்களாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்**

தமிழ்நாடு மாநில ஜமாஅத்துல் உலமா சபை தலைவரும் லால்பேட்டை மன்பவுல் அன்வார் அரபிக் கல்லூரி பேராசிரியருமான மௌலவி ஏ.இ.எம். அப்துர் ரஹ்மான், மாநில பொதுச் செயலாளர் மவ்லவீ அப்துல் காதர், மாநில பொருளாளர் மௌலவி எஸ்.எம். முஹம்மது தாஹா, மாநில ஜமாஅத்துல் உலமா சபை கௌரவ தலைவரும் வீரசோழன் ஜாமிஆ கைராத்துல் இஸ்லாம் அரபிக் கல்லூரி முதல்வருமான மௌலவி ஓ.எம். அப்துல் காதிர் பாகவீ, திருநெல்வேலி மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை தலைவரும் அல்ஹசனாத்துல் ஜாரியா அரபிக் கல்லூரி முதல்வருமான மௌலவி டி.ஜே.எம். சலாஹுத்தீன், வேலூர் மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை செயலாளரும் வாணியம்பாடி மஃதினுல் உலூம் அரபிக்கல்லூரி முதல்வருமான மௌலவி முஹம்மது வலியுல்லாஹ்.

மாநில துணைப் பொதுச் செயலாளரும் பாபநாசம் ஆர்.டி.பி. காலேஜ் அரபித் துறை பேராசிரியருமான மௌலவி தேங்கை ஷர்புத்தின்.

சென்னை மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை தலைவரும் மண்ணடி மஸ்ஜிதே மஃமூர் தலைமை இமாமான மௌலவி ஓ.எஸ்.எம். முஹம்மது இல்யாஸ்.

மாநில தகவல் தொடர்பு நிறுவனர் சிதம்பரம் மௌலவி முஹம்மது இஸ்மாயில் நாஜி, குடியாத்தம் தாருல் உலூம் சயீதிய்யா அரபிக் கல்லூரி நிறுவனர் மௌலவி முஹம்மது அய்யூப்.

தூத்துக்குடி மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை செயலாளரும், மன்பவுஸ் ஸலாஹ் அரபிக் கல்லூரி பேராசிரியருமான மௌலவி எஸ். முஜீபுர் ரஹ்மான்.

தமிழ்நாடு பிலால்கள் சங்கம் தலைவர் ஏ. முஹம்மது யூனுஸ், தமிழ்நாடு இஸ்லாமிய ஆலயப் பணி உடல் உழைப்பு பிலால்கள் நல சங்கம் மாநில பொதுச் செயலாளர் முஹம்மது அலி பேக்.

தமிழ் மாநில இமாம்கள் பேரவை மௌலவி எம்.ஜி. ஷிஹாபுத்தீன்.

சென்னை மந்தைவெளி தலைமை இமாம் மௌலவி ஜி.கே. முஹம்மது இல்யாஸ் ரியாஜி ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர். (நன்றி : தினமணி நாளிதழ் - செய்தி சுருக்கம்)

இன்றும் தேர்தலின் போது மட்டுமே நினைவுக்கு வரும் சீரணி, தஞ்சை, குடந்தை, டெல்லி, இராமநாதபுரம், வல்லம், மதுரை, மயிலாடுதுறைகள் பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் விழிப்புணர்வை இதன் தலைவர்களுக்கு ஏற்படுத்த தவறிவிடுவதும், தப்லீக்கின் அமல்களின் சிறப்புகளுக்கு நிகராக அதன் தலைவர்களின் சொல்லை மதித்து உழைக்கும் ஏமாளி தொண்டர்களும், ஜெகவீர பாண்டியன்கள் மூலம் தன்னிறைவு பெறுவதாக சொல்லப்படும் மிஸ்டர் கிளீன் இமேஜ் தலைவர்கள் இருக்கும் வரை அரசியலில் முஸ்லீம்கள் ஒரங்கட்டப்படும் இழிநிலை தொடரவே செய்யும்.

தேசபக்தி எனும் நல்ல நோக்கத்திற்காக சுதந்திரப் போராட்ட கால மார்க்க அறிஞர்கள் தவறான தீர்ப்பை வழங்கி விட்டு நம் அரசியல் உரிமைகளுக்கு தடையாக இருந்தார்கள் என்றால் தற்போதும் தேர்தல் காலங்களில் பிரச்சார பீரங்கிகளாக வலம் வரும் மார்க்க அறிஞர்களே தமிழக முஸ்லீம்களின் அரசியல் உரிமைகள் வென்றெடுக்கப்பட தடையாக உள்ளார்கள் என நம்புவதற்கு போதுமான ஆதாரம் தான் நாளொன்றுக்கு ஒருமுறையே மார்க்கப் பிரச்சாரம் என நிபந்தனை விதிப்பவர்கள் அரசியல் மேடைகளுக்கு மட்டும் தங்களின் கால்ஷீட்டை வாரி வழங்கும் செயல்.

தரீக்கா ஷெய்குமார்களிடம் முரீது வாங்கினால் நேராக சொர்க்கம் தான் என்ற நிலையை கடுமையாக விமர்சித்து விட்டு இன்று இயக்கத்தில் உறுப்பினரால் நேரடி சொர்க்கம் என்ற கிட்டதட்ட நம்பிக்கைக்கு நம் அறிவை அடகு வைத்து விட்ட சகோதரர்களே, காலில் போடும் செருப்பு விலைமதிக்க முடியாததாக இருந்தாலும் வீட்டுக்கு வெளியே தான் என இயக்கங்களை ஒரு எல்லைக்குள் நிறுத்தத் தவறியவர்களில் ஒருவனாக இருந்த நான் இன்றும் அதே நிலையில் தொடரும் என் சகோதரர்களுக்காக எழுப்பும் எச்சரிக்கை மணி இது.

சமுதாயத்தின் மற்றொரு சாபக்கேட்டை சுட்டிக்காட்டாவிட்டால் இக்கட்டுரை நிறைவுறாது ஆம், அதுதான் மீடியா.

பத்திரிக்கை இல்லையா? டிவி பிரச்சாரம் இல்லையா? வெப்சைட்டுகள் இல்லையா? எனத்தானே கேட்கப் போகிறீர்கள். முஸ்லீம்களின் தினமலர் என பெயர் எடுப்பதற்காக அதன் விட்டகுறை தொட்ட குறை வேலைகளை தானே பெரும்பாலான நேரங்களில் செய்கின்றன. அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுங்கள் இன்னும் உங்கள் கைகளாலேயே

உங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள் இன்னும், நன்மை செய்யுங்கள் நிச்சயமாக அல்லாஹ் முஹ்ஸின்களை நன்மை செய்வோரை- நேசிக்கின்றான். (அல்குர்ஆன் 2: 195) என்ற வசனம் எச்சரித்துக் கொண்டு இருக்கும் நிலையிலும், எந்த இயக்கம் அல்லது தனி நபர்கள் அதை வெகுஜன மீடியாவாக, குறைந்தபட்சம் முஸ்லீம் சமுதாயம் மட்டுமாவது விரும்பும் சார்பற்ற, பொறுப்புள்ள ஊடகமாக கொண்டு சென்றுள்ளார்கள்? ஆளுக்கொரு சுயதம்பட்ட பத்திரிக்கைகள், வெப்சைட்டுகள், சின்னத்திரை நேரங்கள் இருக்கத்தான் செய்கிறது அது தன் அபிமானிகளை திருப்தி செய்ய அல்லது தன் தொண்டர்களை தன் கட்டுக்குள் வைத்திருக்க மட்டுமே பெரும்பாலும் பயன்படுகின்றன.

அனைத்து சமுதாய மக்களும் விரும்பி வாங்கும் வகையான அமைப்பில், அனைவர் கைக்கும் கிடைக்கக்கூடிய வகையில் மற்ற பத்திரிக்கைகள் செய்வதுபோல்

- பொதுவான பிற பத்திரிக்கைகளின் முகவர்கள் மூலம்,
- பொதுவான புத்தகக்கடைகள் மூலம்,
- பேருந்து, தொடர்வண்டி நிலைய கடைகள் மூலம்,
- இளைஞர்கள் உலாவரும் பெரும் வர்த்தக கூடங்களில் இடம்பிடிப்பதன் மூலம்,
- நூலகங்களில் என எண்ணற்ற இன்னும் பல வழிகள் மூலம் கொண்டு சேர்க்க முயற்சி செய்தோமா? இப்படியெல்லாம் நாம் சிறிதளவாவது முயன்றிருந்தால் நம் மீது பிற மீடியாக்கள் சுமத்தும் அவதூறுகளின் உண்மைத்தன்மை குறித்து விளக்கிட, அரசு மற்றும் அரசியல்வாதிகளுக்கு நம் குறைகளை சுட்டிட, மாற்றாருக்கும் மார்க்கத்தை எளிதில் எத்தி வைத்திட, நம்மை ஒரங்கட்டும் அரசாங்கத்தையே நிர்ணயிக்கும் வலிமை என பற்பல நன்மைகளை பெற முடியுமே! சற்றே முயன்றால் கைக்கு எட்டும் தூரமே உள்ள விஷயத்தை கோட்டை விட்டது யார் குற்றம்?

என்னிடமிருந்து ஒரேயொரு செய்தி கிடைத்தாலும் அதைப் பிறருக்கு எடுத்துரையுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அம்ர் பின் அப்துல்லாஹ்(ரலி) நூல்: புகாரி 3461 என மார்க்கத்தை, மார்க்கத்தின் மூலம் சகல துறைகளிலுமான விழிப்புணர்வை மக்களிடத்தில் கொண்டு சேர்க்க நபி(ஸல்) கூறியிருக்க இன்று இணையம் மற்றும் சின்னத்திரைகள் மூலம் பலரும் பல நேரங்களில் மார்க்கத்தின் பெயரால் சமுதாயத்தின் பெயரால் எதை எத்தி வைக்கிறார்கள் என்பதை உங்கள் மனசாட்சியிடமே நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

மேலும் அல்லாஹ்வுக்கு வழிபடுங்கள், இன்னும் தூதருக்கு கீழ்ப்படியுங்கள் ஆகவே, நீங்கள் புறக்கணித்து விட்டால் நம் தூதர் மீதுள்ள கடமையெல்லாம் அவர் தெளிவாக எத்தி வைப்பது தான் (அல்குர்ஆன் 64: 12)

விசுவாசங் கொண்டுள்ளார்களே அத்தகையோரை, இம்மை வாழ்விலும் மறுமையிலும் உறுதியான சொல்லைக் கொண்டு அல்லாஹ் நிலைப்படுத்துகிறான் மேலும் அல்லாஹ் அநியாயக்காரர்களைத் தவறான வழியில் விட்டும் விடுகிறான். மேலும் அல்லாஹ் தான் நாடியதைச் செய்கிறான். (அல்குர்ஆன் 14: 27)

முஸ்லீம்கள் அரசியலில் ஓரங்கட்டப்படுவதேன்? என்ற கேள்விக்கு இக்கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளது போன்ற பல காரணிகளின் கதம்பமே என எச்சரித்தும் நிவர்த்தி செய்ய வாருங்கள் என சமுதாய சொந்தங்களை அழைத்தும் என் சிறிய ஆய்வை நிறைவு செய்கிறேன். வஸ்ஸலாம்.

# உணவளிப்பதும் உடை வழங்குவதும் கணவனின் பொறுப்பே! (பாகம் - 3)

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

## நபி(ஸல்) அவர்கள் தன் மனைவியருடன் நடந்து கொண்ட சில நிலைகள்

1. நான் நபி(ஸல்) அவர்களுடன் போர்வைக்குள் இருந்த போது எனக்கு மாதவிடாய் ஏற்பட்டு விட்டது, நான் போர்வையை விட்டும் வெளியாகி மாதவிடாய் காலத்தில் நான் அணியும் ஆடையை எடுத்து அணிந்து கொண்டேன். உமக்கு மாதவிடாய் ஏற்பட்டுவிட்டதா? என என்னிடம் நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஆம் என நான் கூறினேன். அவர்கள் என்னை அழைத்து போர்வைக்குள் எடுத்துக் கொண்டார்கள். இன்னும் அவர்கள் கூறுகின்றார்கள்: நபி(ஸல்) அவர்கள் நோன்பு நோற்றிருக்கும் போது என்னை முத்தமிடுவார்கள். பெருந்தொடக்கின் காரணமாக நானும் நபி(ஸல்) அவர்களும் ஒரு பாத்திரத்திலிருந்து குளிப்போம். (புகாரி, முஸ்லிம்)

2. நபி(ஸல்) அவர்களின் பள்ளியில் ஹபஷிகள் அம்பெய்து விளையாடிக்கொண்டிருந்த போது நபி(ஸல்) அவர்கள் எனது அறையின் வாசலுக்கு முன் நின்று கொண்டிருந்ததை நான் பார்த்தேன். நான் அவர்கள் விளையாடுவதை பார்ப்பதற்காக நபி(ஸல்) அவர்கள் அவர்களின் போர்வையால் என்னை மறைத்துக் கொண்டு நான் திரும்பும்வரை எனக்காக நின்று கொண்டிருப்பார்கள். இந்த சிறுவயதுப் பெண் வீணானவைகளின்மீது பேராசையுடன் எவ்வளவு நேரத்தை கழிக்கின்றார் என்பதை கணக்கிட்டுக் கொள்ளுங்கள் எனவும் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) அவர்கள். (புகாரி, முஸ்லிம்)

3. நபி(ஸல்) அவர்கள் உட்கார்ந்த நிலையில் இரவுத் தொழுகையை தொழுவார்கள், முப்பது அல்லது நாற்பது ஆயத்துக்கள் மீதமாக இருக்கும்போது எழுந்து நின்று தொழுவார்கள், பின்பு ருகூஉம் சுஜூதும் செய்வார்கள் இவ்வாறே இரண்டாவது ரக்அத்திலும் செய்வார்கள் தொழுகையை முடித்தால் (என்னை) பார்ப்பார்கள் நான் விழித்துக் கொண்டிருந்தால் என்னுடன் உரையாடுவார்கள் நான் தூங்கிக் கொண்டிருந்தால் சாய்ந்து விடுவார்கள் என ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

4. (ஒருமுறை) நானும் நபி(ஸல்) அவர்களும் ஓடினோம் நான் நபி(ஸல்) அவர்களை முந்திவிட்டேன். (கொஞ்ச நாள் கழித்து) எனக்கு உடல் பெருத்த நேரத்தில் (மீண்டும்) நானும் நபி(ஸல்) அவர்களும் ஓடினோம் என்னை நபி(ஸல்) அவர்கள்

முந்திவிட்டார்கள். இது அதற்கு சமம் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் இப்னு ஹிப்பான்)

5. பெண் பொம்மைகளைக் கொண்டு நபி(ஸல்) அவர்களிடத்தில் நான் விளையாடுவேன். என்னுடன் விளையாடும் தோழிகளும் இருந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் (வீட்டினுள் நுழைந்தால்) தங்களை நபி(ஸல்) அவர்களிலிருந்து மறைத்துக் கொண்டு அந்த விளையாட்டுப் பொருட்களை ஒவ்வொன்றாக என்னிடம் அனுப்பி என்னுடன் சேர்ந்து விளையாடுவார்கள். (புகாரி, முஸ்லிம்)

6. என்னிடம் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், நீ என்னுடன் திருப்தியாக இருப்பதையும் கோபமாக இருப்பதையும் நிச்சயம் நான் அறிவேன் என்றார்கள். அதற்கு நான், நீங்கள் எவ்வாறு அதை அறிவீர்கள் என்றேன். நீங்கள் என்னுடன் திருப்தியாக இருக்கும் போது முஹம்மதின் இறைவனின் மீது ஆணையாக என்பீர்கள், என்மீது கோபமுள்ளவராக இருந்தால் இப்றாஹீமின் இறைவன்மீது ஆணையாக என்பீர்கள் என்றார்கள் அதற்கு நான் ஆம் என்றேன். அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக உங்களின் பெயரை மாத்திரம்தான் நான் வெறுத்தேன் என்றேன். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) அவர்கள். (புகாரி, முஸ்லிம்)

7. நபி(ஸல்) அவர்கள் நோயுற்ற அவர்களின் கடைசி காலத்தில் தன் மனைவியர் அனைவரையும் ஒன்று கூட்டி உங்கள் அனைவரின் வீட்டிற்கும் வந்து செல்ல (இப்போது) என்னால் முடியாது, ஆகவே ஆயிஷா(ரலி) அவர்களின் வீட்டில் இருப்பதற்கு எனக்கு அனுமதி தருவீர்களாக எனக்கேட்டார்கள் அதற்கு அவர்களும் அனுமதி வழங்கினார்கள். (அபூதாவூத்)

மேல் கூறப்பட்ட நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நமக்கு முன்மாதிரி இருக்கின்றது. ஒரு நபியாக படைத்தளபதியாக மாமனிதராக ஆசிரியராக… வாழ்ந்த நபி(ஸல்) அவர்கள் தன் மனைவிமாருடன் எவ்வளவு பண்பாக அன்பாக பழகியிருக்கின்றார்கள். நாமும் இவ்வாறே நம் மனைவியருடன் நடந்து கொள்ள வேண்டும். அதாவது கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவருடன் மனம்விட்டு பழக வேண்டும். சில நேரத்தில் இருவரும் சேர்ந்து விளையாடலாம் நபி (ஸல்) அவர்களும் ஆயிஷா(ரலி) அவர்களும் சேர்ந்து ஓடியது போன்று. சில நேரத்தில் சிரித்து மகிழலாம், சில நேரம் தம் உறவுகளை சந்திப்பதற்காக செல்வது, சில நேரம் வெளி இடங்களுக்கு சென்று அங்குள்ள அல்லாஹ்வின் அத்தாட்சிகளை குடும்பத்துடன் பார்த்து அல்லாஹ்வின் வல்லமையை தெரிந்து நமது ஈமானை அதிகப்படுத்திக் கொள்ளலாம். உதாரணத்திற்கு பூங்காக்கள் மிருகக்காட்சிசாலை இன்னும் இது போன்ற பொது இடங்கள்… ஆனால் நாம் செல்லும் இடங்களில் அல்லாஹ் தடுத்தவைகள் (ஹராமாக்கப்பட்டவைகள்) தவிர்க்கப்பட வேண்டும். மாறாக எல்லா நேரத்திலும் மனைவியுடன் கோபத்துடன் நடந்து கொள்வது கூடாது. அவ்வாறே எல்லா நேரங்களிலும் வணக்கத்தில் ஈடுபட்டு குடும்பத்துடன் சேர்ந்து பழகுவதை விடுவதும் கூடாது. அப்படி வாழ்ந்த நபித்தோழர்களை நபி(ஸல்) அவர்கள் தடுத்தும் இருக்கின்றார்கள்.

## திருமணத்தின் பேரில் நடக்கும் சில அனாச்சாரங்கள்

### 1. தங்கம், ரொக்கம்

### ஐம்பதுக்கு ஐம்பது

ஐம்பதுக்கு ஐம்பது என்றால் புரிந்துவிட்டதா? அதுதான் ஐம்பது தங்கப்பவுன் என்றால் ஐம்பது ஆயிரம் ரொக்கமாம். பெண்ணை பெற்றவர்களுக்கு தன் மகளுக்கு எத்தனை பவுன் போடவேண்டுமென்பது தெரியாதோ! எதை விட்டுக்கொடுத்தாலும் இதை விட்டுக்கொடுக்க முடியாது என்று அடம்பிடிப்பார்கள் பண விரும்பிகள். வியாபாரத்தில் விலை குறைப்பது போல் வாதாடி ஏதோ ஒரு மாதிரியாக ஐந்தை பத்தை குறைப்பார்கள். ஐம்பது பவுன் என்பது சாதாரணமான ஒன்றா? பிச்சைக்காரர்கள் பணம் சேர்ப்பது போன்று பெண்பிள்ளையை பெற்ற நாளிலிருந்தே வாயையும் வயிற்றையும் கட்டிக் கொண்டு தங்கச் சேக்கின்றார்கள் எத்தனையோ பெற்றோர்கள். அப்படி சேகரித்துத்தான் பெண் பிள்ளைக்கு தங்கம் சேர்க்கின்றார்கள் பல பெற்றோர்கள். இதை மொத்தமாக ஒரே நாளிலேயே கை நிறைய எடுத்துச் செல்கின்றது இந்த ஆண் வர்க்கம்.

### இப்படியும் சில ஊர்களில் நடக்கின்றது

இதை நம்பினால் நம்புங்கள் ஆனால் உண்மை. அதாவது மணமகனின் சகோதரிகளுக்கும் பெண்வீட்டாரிடத்திலிருந்து தங்கம் வாங்கிக் கொடுக்கும் ஊர்களும் இருக்கின்றது. ஒரு காலத்தில் இரண்டு கிராம் மோதிரத்திலிருந்து ஆரம்பித்து பின்பு அது பென்டனாக மாறி இன்று ஒரு இரு பவுன் காப்புகளாக விஸ்வரூபமெடுத்திருக்கின்றது. மாப்பிள்ளைக்கு ஒரு சகோதரியோ அல்லது ஒன்றைவிட அதிகமாகவோ இருக்கலாம், அனைவருக்கும் சரி சமமாக தங்க நகைகள் வழங்க வேண்டும். அவர்களுக்கு வழங்கப்படும் நகையின் நிறை அவர்களுக்குள் பேசி முடிக்கப்பட்ட நிறையை விட கொஞ்சம் குறைந்திருந்தாலும் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இதற்காக பல இலட்சங்களை ஒதுக்க வேண்டியிருக்கின்றது.

### 2. வலீமா உணவு

வலீமா உணவு கொடுப்பது மணமகனின் பொறுப்பாகும். ஆனால் இன்று அதையும் பெண்ணின் தந்தையே செய்து கொடுக்க வேண்டும். எங்களின் குடும்பம் பெரிய குடும்பம், ஆகவே எங்களுக்கு இத்தனை சஹண் கொடுக்கத்தான் வேண்டும் என்கிறார்கள். அப்துர்ரஹ்மான் இப்னு அஃப்(ரலி) அவர்கள் திருமணம் முடித்ததை அறிந்து கொண்ட நபி (ஸல்) அவர்கள் ஒரு ஆட்டையாவது அறுத்து வலீமா கொடுத்து விடுங்கள் என்று கணவனுக்கே அந்த பொறுப்பை கொடுத்தார்கள்.

### 3. சீர்வரிசை

தன் மகளை குடிபூரப்போகும் வீட்டிற்கு அனுப்பும் போது சீர்வரிசை என்கிற பேரில் வீட்டுத்தளபாடங்கள் (பிரிஜ் வாசிங்மிஷின் உட்பட) மற்றும் வாகனம் வரை அந்தப் பட்டியல் நீழுகின்றது. இவைகளுக்கு எத்தனை இலட்சம் தேவைப்படுகின்றது.

### 4. தலைப்பிள்ளை செலவு

மேல் கூறப்பட்ட பட்டியலுக்கே இலட்சம் என்ன, கோடியை தட்டுகிறது. அந்தக் கடனை கொடுத்து முடிப்பதற்குள்ளையே முதல் பிரசவத்திற்காக மகள் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டிருக்கின்றாள். சில நேரங்களில் இரண்டு பெண்மக்கள் ஒரே நேரத்தில்

பிரசவத்திற்காக தந்தை வீட்டிற்கு வந்து விடுகின்றார்கள். முதல் பிரசவச் செலவையும் பெண்ணின் தந்தைதான் பொறுப்பேற்க வேண்டும். அத்தோடு இந்த ஈனச்செயல் முடிவடையவில்லை. பிள்ளையை பெற்றெடுத்து அதற்குரிய அனைத்து செலவுகளையும் பொறுப்பெடுத்த பாட்டன் பேரப்பிள்ளையை அனுப்பும் போது அதற்குரிய சீர்வரிசையையும் செய்துதான் அனுப்ப வேண்டும். அப்பாடா... ஒரு பெண் மகளை பெற்றெடுத்ததற்கு இந்த தண்டனையா இனி பெண்பிள்ளையே வேண்டாம் என்று குழந்தை பாக்கியத்தையே கட் பண்ணிவிடுகின்றார்கள். ஆண் பிள்ளை பெற எண்ணமிருந்தாலும் சில நேரம் அது பெண்பிள்ளையாக இருந்துவிடுமோ என்று பயந்து மொத்தத்தில் பிள்ளையே வேண்டாம் என்கிற முடிவிற்கு எத்தனை குடும்பம் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். பெண் பிள்ளை பெற்றெடுப்பது மடமையா? அது ஜாஹிலிய்யா காலத்து மக்களின் கொள்கை. பெண் பிள்ளையை பெற்றெடுப்பதை கேவலமாக கருதினார்கள் கற்காலத்து மக்கள். தன் பிள்ளையையே தன் கையினால் குழிதோண்டி புதைத்தவர்கள் அவர்கள். அவர்களோ பெண் பிள்ளை என்று தெரிந்த பின்பே கொலை செய்தார்கள். ஆனால் இன்று என்ன பிள்ளை என்று தெரியாமலையே வயிற்றுக்குள் வைத்தே கொன்று விடுகின்றார்கள். இனி எந்தப்பிள்ளையும் வேண்டாம் என்று கற்பத்தடை செய்பவர்கள் பலர். அன்று பெண் பிள்ளை பெற்றெடுக்கும் பெண்ணை கேவலமாக பேசினார்கள் இன்றும் அந்த நிலைதான் தொடர்கின்றது. தொடர்ந்து பல பெண்பிள்ளை பெற்றெடுத்த பெண்ணைப்பார்த்து கோபப்படும் கணவன்மார் ஒரு பக்கம் என்றால் பெண்ணாக பிறந்த மாமியாரின் தொல்லை இன்னுமொரு பக்கம். பாலை நிர்ணயிப்பது பெண் கையிலா இருக்கின்றது. அது அல்லாஹ்வின் ஏற்பாடு அல்லவா? இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன? இந்த சீதனக் கொடுமைதான்!

தொடரும் இன்ஷா அல்லாஹ்...

---

*நபி மூஸா(அலை) ...முதல் பக்கத் தொடர்ச்சி...*

பனு இஸ்ராயீலர்களின் ஆண் மகன் தான் என்று கனவு காண்கிறான். அக்கனவின் விளைவாக அவனுக்கு பித்தம் தலைக்கு ஏறி அவனின் கொடூரம் விஷ்வரூபமானது. இதன் காரணமாக அவனுடைய ஆட்களை அழைத்து ஆலோசனை செய்கின்றான். அவ்வாலோசனையின் முடிவில் இஸ்ராயீலர்களின் ஆண் மக்களை கொன்றுவிட வேண்டும் என்று முடிவு செய்யப்படுகிறது, அன்றிலிருந்து கர்பமுற்ற பெண்களின் வீட்டில் அடையாளமிட்டு, குழந்தை பிறந்ததும் ஆண் குழந்தையாக பிறந்தால் தாயின் முன்னிலையிலேயே கொன்று விடுவார்கள் பெண் குழந்தையாக பிறந்தால் வாழ விட்டும் வந்தார்கள். இஸ்ராயீல் சந்ததியில் புதிய ஆண் சந்ததிகள் உருவாகுவது முற்றிலுமாக நின்ற காரணத்தினால் புதிதாக வேலைக்கு ஆட்கள் கிடைப்பது என்பது அவர்களுக்கு இல்லை என்று முடிவாயிற்றது. ஏற்கனவே உள்ளவர்கள் வயது முதிந்தவர்களாக இருந்தனர் ஆகையால் அவர்களில் உள்ள பெண் மக்களை வைத்து ஆண்கள் வேலை செய்வது போல் வேலை வாங்கவும் அவர்களால் இயலவில்லை. இதனால் மீண்டும் தன் கூட்டத்தாரை கூட்டி ஆலோசனை செய்தான். ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் ஆண் குழந்தைகளை கொன்று விட வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது. குழந்தைகளை கொல்லக் கூடாத ஆண்டில் தான் ஹாரூன்(அலை) அவர்கள் பிறக்கின்றார்கள். குழந்தையை கொல்ல வேண்டும் என்ற ஆண்டில் நபி மூஸா(அலை) அவர்கள் பிறக்கின்றார்கள்

உங்களைக் கடுமையாக வேதனைப்படுத்தி வந்த ஃபிர்அவ்னின் கூட்டத்தாரிடமிருந்து உங்களை நாம் விடுவித்ததையும் (நினைவு கூருங்கள்). அவர்கள் உங்கள் ஆண் மக்களைக் கொன்று, உங்கள் பெண் மக்களை (மட்டும்) வாழவிட்டிருந்தார்கள். அதில் உங்களுக்கு உங்கள் இறைவனிடமிருந்து ஒரு பெரும் சோதனை இருந்தது. (அல் பகரா-49)

மூஸா(அலை) அவர்களின் தாயார் கருவுற்ற உடனேயே அல்லாஹ் அவர்களை பாதுகாக்கின்றான். வயிற்றில் கரு வளர வளர வெளியில் தெரியாதவாறு மறைத்து அவர்களை பாதுகாக்கின்றான் அதே போன்றே பிர்அவ்ன் கூட்டத்தாரில் யாருக்கும் தெரியாதவாறு குழந்தை பிறக்கின்றது. ஈன்றெடுத்த ஆண் குழந்தையை இலைமறைக் காயாக வளர்க்கின்றார்கள் மூஸா(அலை) அவர்களின் தாயார். சந்தேகிக்கும் நபர்கள் யாரேனும் தன் வீட்டின் பக்கமாக வந்தால் வீட்டில் வைத்திருந்த சிறியபெட்டி (அல்லது பேழை)யில் வைத்து நதியில்(நைல் நதி) விட்டு விடுவார்கள் அது நதியோடு சென்று விடாமல் இருக்க ஒரு கயிற்றைக் கொண்டு கட்டி விடுவார்கள். இவ்வாறு 'பிர்அவ்னின் கூட்டத்தாருக்கு பயந்து குழந்தையை மிகவும் பாதுகாப்பில் வளர்த்து வரும் வேளையில், ஒரு நாள் நதியில் விட்ட குழந்தை பெட்டியை கட்ட மறந்து விடுகிறார்கள் அது நதியில் மிதந்து சென்று விட்டது. குழந்தை காணாமல் போன செய்தியை எல்லோரிடமும் சொல்லிட வேண்டும் என்று நினைத்தார்கள் ஆனால் அல்லாஹ் அவர்களின் மனதில் அவ்வாறு செய்திடாதவாறு தடுத்து ஒரு என்னத்தை உருவாக்கி அறிவிப்பு செய்கின்றான். குழந்தையை கொன்று விடுவார்கள் என்று நீங்கள் அஞ்ச வேண்டாம். அந்நதியிலேயே விட்டு விடுங்கள். குழந்தை மரணித்து விடும் என்று கவலைப்பட வேண்டாம். குழந்தைக்கு நாங்கள் பாது காப்பு அளிப்போம். நம் தூதர்களில் ஒருவராக ஆக்குவோம். அக்குழந்தையை மீண்டும் உங்களிடமே ஒப்படைப்போம் என்று அல்லாஹ் உத்திரவாதம் அளிக்கின்றான். அல்லாஹ் அறிவித்தவாறே மூஸா (அலை) அவர்களின் தாயார் செய்யப் பணிந்தார்கள். நதியில் மிதந்து சென்று கொண்டிருந்த அப்பெட்டியானது பிர்அவ்ன் அரண்மனைக்கு பக்கமாக வந்ததும் அங்கு வேலை புரியும் பணிப்பெண் அப்பெட்டியை திறக்காமல் அப்படியே பிர்அவ்னின் மனைவி ஆசியா(ரலி) அவர்களிடம் ஒப்படைக்கிறாள். அவர்கள் திறந்து பார்த்த பொழுது ஒரு அழகான ஆண் குழந்தையை கண்டார்கள். இதைக்கண்ட பிர்அவ்ன் இக்குழந்தைதான் தன் ஆட்சியை பிடிக்கும் குழந்தையாக இருக்குமோ என்று நினைத்து அக்குழந்தையை கொல்ல முயன்றான் அப்பொழுது ஆசியா(ரலி) அவர்கள் பிர்அவ்னிடம் நமக்கென்று குழந்தைகள் ஏதும் இல்லை உனக்கும் எனக்கும் கண் குளிர்ச்சியை தரும் குழந்தையாக

உள்ளது எனவே இக்குழந்தையை கொன்று விடாதே என்று கூறினார்கள். அதற்கு உனக்கு வேண்டுமானால் கண் குளிர்ச்சியை தரலாம் ஆனால் எனக்கு அவ்வாறு இல்லை என்று கூறி குழந்தையை விட்டு விடுகின்றான். அதே போன்றே ஆசியா(ரலி) அவர்களுக்கு அல்லாஹ் கண் குளிர்ச்சியையும் பின்பு அல்லாஹ்வின் நேர்வழியும் கிடைக்கச்செய்தான் இதை போன்று பிர்அவ்னும் கண் குளிர்ச்சியை தருகிறது என்று கூறியிருந்தால் அவனுக்கும் அல்லாஹ்வின் நேர்வழி கிடைத்திருக்கும் என்று இப்னு அப்பாஸ் (ரலி)அவர்கள் கூறினார்கள். ஆசியா(ரலி) அவர்கள் கூறியதை பிர்அவ்ன் குடும்பத்தார்கள் ஏற்றுக் கொள்கின்றனர். நமக்கு முடிவு கட்டுவது இக்குழந்தைதான் என்று அறியாத பிர்அவ்ன் மற்றும் அவனின் மந்திரி ஹாமானும் அவர்களின் படைகளும் அல்லாஹ்வின் சூழ்ச்சியில் அவர்களுக்கு அவர்களே அநீதி இழைத்துக் கொண்டனர் இது அல்லாஹ்வின் வல்லமையாகும். அல்லாஹ் தன் திருமறையில் சூழ்ச்சியாளர்களுக்கெல்லாம் நான் சூழ்ச்சியாளராக இருக்கின்றேன் என்று கூறுகின்றான் இது அல்லாஹ்வின் அத்தாட்சியாகும்.

மூஸா(அலை) அவர்களின் தாயுடைய இருதயம் (துக்கத்தால்) வெறுமையாகி விட்டது முஃமின்களில் நின்றுமுள்ளவளாய் இருப்பதற்காக நாம் அவள் உள்ளத்தை உறுதிப்படுத்தாது இருந்திருந்தால், அவள் (மூஸா(அலை) ஆற்றில் விடப்பட்டதை) வெளிப்படுத்த முடுகியிருப்பாள். (ஸூரத்துல் கஸஸ்: 10)

குழந்தை அவ்வரண்மனையிலிருந்த செவிலித்தாய்களிடம் பால் குடிக்க மறுக்கின்றது இச்செய்தி மூஸா(அலை) அவர்களின் தாயாருக்கு கிடைக்கின்றது. உடனே அவர்கள் மூஸா(அலை) அவர்களின் சகோதரி மிகவும் புத்திசாலி என்பதால் செய்தியை தெரிந்து வர அவர்களை அரண்மனைக்கு அனுப்பி வைக்கின்றார்கள். அதே போன்றே அவ்வப்போது உள்ள செய்திகளை தன் தாயாரிடம் வந்து கூறுவார்கள் ஒரு நாள் கடைவீதிக்கு இக்குழந்தையை கொண்டுவரப்பட்டு அங்குள்ள செவிலித்தாயார்களிடம் பால்குடிக்க முயல்கின்றனர். அங்கேயும் பால் குடிக்க மறுக்கின்றது உடனே மூஸா (அலை) அவர்களின் சகோதரி நான் இக்குழந்தைக்கு பாலூட்டும் தாயாரை அறிவிக்கட்டுமா என்று கேட்கிறார்கள். அதற்கு பிர்அவ்னின் ஆட்கள் நீ யார் உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்கின்றனர் அதற்கு மூஸா(அலை) அவர்களின் சகோதரி உங்கள் அரண்மனை கவலையாக உள்ளது எனவே உங்கள் மன்னரை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதற்காக இவ்வாறு முயற்சியில் இறங்கினேன் என்று கூறினார்கள். அவ்வாறே மூஸா(அலை) அவர்களின் தாயாரிடம் குழந்தையை ஒப்படைக்கப்பட்டு குழந்தையும் பால் அருந்தியது. மூஸா(அலை) அவர்களை எவர்களிடமும் பால் குடிக்காதவாறு அல்லாஹ் தடுத்தான். அதே போன்று அல்லாஹ் தன் வாக்குறுதியை நிறைவேற்றினான். குழந்தை பால் குடித்த சந்தோஷத்தை பிர்அவ்ன் அறிந்து அதிகமான அன்பளிப்புகளை வழங்க உத்தரவு பிறப்பிக்கின்றான்

அவரை (குழந்தையை)ப் பேழையில் வைத்து (அப்பேழையை நைல்) நதியில் போட்டுவிடும் பின்னர் அந்த நதி அதைக் கரையிலே கொணர்ந்து எறிந்து விடும். அங்கே எனக்கு பகைவனும், அவருக்குப் பகைவனுமாகிய (ஒரு)வன் அவரை எடுத்துக்கொள்வான்" (எனப் பணித்தோம்). மேலும், "(மூஸாவே!) நீர் என் கண் முன்னே வளர்க்கப்படுவதற்காக உம் மீது அன்பைப் பொழிந்தேன். (பேழை கண்டெடுக்கப்பட்ட பின்) உம் சகோதரி நடந்து வந்து, 'இவரை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒருவரை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா?' என்று கேட்டாள், ஆகவே நாம் உம் தாயாரிடம், அவருடைய கண் குளிர்ச்சியடையும் பொருட்டும், அவர் துக்கம் அடையாமல் இருக்கும் பொருட்டும் உம்மை (அவர்பால்) மீட்டினோம், பின்னர் நீர் ஒரு மனிதனைக் கொன்று விட்டீர். அப்பொழுதும் நாம் உம்மை அக்கவலையிலிருந்து விடுவித்தோம். மேலும் உம்மைப் பல சோதனைகளைக் கொண்டு சோதித்தோம். அப்பால் நீர் பல ஆண்டுகளாக மதியன் வாசிகளிடையே தங்கியிருந்தீர் மூஸாவே! பிறகு நீர் (நம் தூதுக்குரிய) தக்க பருவத்தை அடைந்தீர். (ஸூரத்து தாஹா-39,40)

தொகுப்பு: நாஞ்சிலார்

தொடரும் இன்ஷா அல்லாஹ்...

# காய்களின் மகத்துவம்

**முருங்கை காய் :**

இது ஒரு சத்துள்ள காய். உடலுக்கு நல்ல வலிமையைக் கொடுக்க வல்லது. இதன் சுபாவம் சூடு. ஆதலால் சூட்டு உடம்புக்கு ஆகாது. இதை உண்டால் சிறுநீரும் தாதுவும் பெருகும். கோழையை அகற்றும். முருங்கைக்காய் பிஞ்சு ஒரு பத்திய உணவாகும். இதை நெய் சேர்த்தோ அல்லது புளி சேர்த்தோ சமைப்பது நலம்.

**சுரைக்காய் :**

சுரைக்காய் குளிர்ச்சியான சுபாவம் கொண்டது. இதனால் இது சூட்டைத் தணிக்கும். சிறுநீரைப் பெருக்குவதுடன், உடலை உரமாக்கும். இதுவொரு சிறந்த மலச்சுத்தி காய் ஆகும். தாகத்தை அடக்க வல்லது. கருஞ்சுரைக்காய் என்று ஒரு வகை இருக்கிறது. அது குளுமை செய்வதுடன் தாகத்தை அடக்கும். அத்துடன் சீதளத்தையும், பித்தத்தையும் போக்கும். ஆனால் அஜீரணத்தை உண்டாக்கி விடும்.

**புடலங்காய் :**

இது ஒரு சத்துள்ள உணவு. ஆகையால் கிடைத்தபோது வாங்கி சமைத்து உண்ணலாம். மேலும் இது பத்தியத்துக்கு மிகவும் சிறந்த காய். எளிதில் சீரணமாகி நல்ல பசியை உண்டாக்கும். வாத, பித்த, கபங்களால் ஏற்படும் திரிதோஷத்தைப் போக்கும். வயிற்றுப் பொருமல், வயிற்றுப் பூச்சி இவற்றைப் போக்கும். வாத, பித்தங்களை அடக்கி வீரிய புஷ்டியைக் கொடுக்கவல்லது. இதனால் ஏற்படும் தீமைக்கு கடுகுப் பொடி, கரம் மசாலா மாற்றாகும். இந்தக் காயை உண்டால் காமத்தன்மை பெருகும்.

# இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் (பாகம் - 19)

*- டாக்டர் ஷேக் சையது M.D.*

விந்தணு, சினை முட்டை ஒன்றையொன்று முந்திக் கொள்வது குழந்தையின் சாயலில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா? என்பது குறித்து அறிவியல் உலகம் என்ன கருதுகிறது என்பதை இத்தொடரில் அலசுவோம்.

விந்தணு, சினை முட்டை ஒன்றை யொன்று முந்திக் கொள்வதால் குழந்தையின் சாயலில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தி விட முடியாது. மாறாக இரண்டு அணுக்களும் இரண்டற இணைந்திடும் வேளையில் ஒன்றையொன்று மிகைத்து விடுவதால்தான் குழந்தையின் சாயலில் மாற்றம் ஏற்படுகிறது என்பதே இன்றைய அறிவியல் கண்டுபிடிப்பு. இதனை சற்று விரிவாகப் புரிந்து கொள்ள சில அடிப்படைத் தகவல்களை நாம் தெரிந்தாக வேண்டும் என்பதால் கீழ்காணும் செய்தியை சற்று கவனமாக வாசித்து அதனை நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

**மரபணுக்கள்:**

பரம்பரைச் செய்திகளை சுமந்திருக்கும் அணுக்களையே மரபணுக்கள் என்று அறிவியல் உலகம் அறிமுகப் படுத்துகிறது. குழந்தை உருவாகலில் இவ்வணுக்கள் மிகப் பெரும் பங்கு வகிக்கிறது என்பதால் அதனை சற்று விரிவாகவே அறிந்து கொள்வோம்.

19ம் நூற்றாண்டின் துவக்கம் வரை மரபணுக்கள் குறித்த எந்த விவரமும் இல்லை. கி.பி.1822ம் ஆண்டு ப்ருன் (Brunn) என்ற ஊரில் பிறந்த கிரிகோர் மண்டேல் (Gregor Mendel) என்பவர்தான் மரபணுக்கள் பற்றிய ஆய்வறிக்கையை முதன் முதலாக கி.பி.1865ம் ஆண்டு வெளியிட்டார். செய்முறையில் தான் கண்டுபிடித்த அதிசயங்கள் நிறைந்த பல அறிவியல் உண்மைகளை அதில் விளக்கி இருந்தார்.

அக்கால கட்டத்தில் புதிதாகக் கண்டு பிடித்ததா(?) நம்பப்படும் அடிப்படையற்ற டார்வின் கொள்கை பற்றிய காரசாரமான சர்ச்சையில் மக்கள் மூழ்கி இருந்ததால், தெரிந்து கொள்ள வேண்டிய மரபணுக்கள் பற்றிய அறிவியல் உண்மைகளிலிருந்து மக்கள் திசைதிருப்பப் பட்டிருந்தார்கள்.

மரபணுக்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் பரம்பரை பற்றிய பல உண்மைகளைக் கண்டுபிடித்த அறிஞர் மண்டேல், 1884ம் ஆண்டு மரணம் அடைகின்ற வரைக்கும் அவர் கண்டுபிடித்த உண்மைகளை திரும்பிப் பார்ப்பதற்கு ஒரு நாதி இல்லை. எனினும் தான் கண்டுபிடித்த அறிவியல் உண்மைகளுக்கு உரிய மரியாதை கொடுக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என்ற பலமான நம்பிக்கையில் மேலும் பல ஆய்வுகளில் அவர் தொடர்ந்து ஈடுபட்டு கொண்டிருக்கும் நிலையிலேயே மரணத்தைத் தழுவினார்.

குறிப்பிட்ட ஒரு குடும்ப உறுப்பினர்களிடையே தொன்று தொட்டு பரம்பரை வியாதி வருவதற்கும் இந்த மரபணுக்கள்தான் காரணம் என்பதையும் தன் ஆய்வில் கண்டு கொண்டதாக மரபணு ஆய்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவரான அறிஞர் மண்டேல் தனது குறிப்புரையில் விளக்கி இருந்தார்.

உயிரோடு இருக்கும் வரை கண்டு கொள்ளப்படாத பல்வேறு அறிஞர்களுக்கு அவர்களது மரணத்திற்குப் பின் பரிசுகள் பல வழங்கி, பாராட்டுகள் பல தெரிவித்து, வாழ்த்தி சிறப்பித்து வரும் வழக்கம் நமது இந்திய நாட்டில் அடிக்கடி நடந்தேறி வருவது போலவே, மண்டேலின் மரணத்திற்குப் பின் அவரின் மரபணு பற்றிய ஆய்வுரைகள் 1900 - 1910 ஆண்டுவாக்கில் மதிப்பிற்குரியதாக மாறத் துவங்கியது. ஹாலந்து நாட்டைச் சேர்ந்த தி வ்ரீஸ் (De Vries), ஜெர்மன் நாட்டைச் சார்ந்த கர்ரன்ஸ் (Correns), ஆஸ்திரிய நாட்டைச் சார்ந்த வோன் டெச்சர்மாக்(Von Tschermak) ஆகிய மூன்று மரபணு விஞ்ஞானிகளும் தங்களது மரபணு ஆய்வுப் பயணத்தை மண்டேல் உருவாக்கிய இப்புதிய சாலையில் தொடர்ந்ததே அதற்கான காரணமாகும்.

அதன் பிறகு மரபணு ஆய்வுக்கு அதிக அளவில் முக்கியத்துவம் வழங்கப்பட்டு, அது பற்றிய பல உண்மைகள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரத் துவங்கியது. மரபணு குறித்த ஆய்வு ஆதி மனிதனின் தோற்றம் வரை சென்று, முதல் மனிதன் எங்கு வாழ்ந்திருக்க வேண்டும் என்ற உண்மைகளை அறிந்து கொள்ளும் அளவிற்கு வளர்ச்சி அடைந்து விட்டது. மத்திய ஆசியாவில் வாழ்ந்து வந்த ஒரு பெண்ணிடமிருந்துதான் மனித இனம் பல்கிப் பெருகி உள்ளது என்ற உண்மை மிக அண்மை காலத்தில் அறிந்து கொள்ளப்பட்டதற்கும் இந்த மரபணு ஆய்வுதான் அடிப்படை.

குப்பைத் தொட்டிகளில் கல்லையும் கரைத்திடும் அளவிற்கு கதறும் பச்சிளம் குழந்தைகளை அனாதைகளாக தூக்கி வீசிய, நெஞ்சில் கொஞ்சம் கூட ஈவு இரக்கம் இல்லாத அரக்கக் குணம் படைத்த அந்தத் தாய் யார்? என இனங்கண்டு கொள்வதற்கும் இந்த மரபணுச் சோதனை, புலனாய்வு செய்கிறது. தந்தையின் கருணைக்கு ஏங்கிக் கொண்டிருக்கும் தான் பெற்ற குழந்தையை தனக்கு பிறந்ததல்ல எனக் கூறி ஏற்க மறுக்கும் கயவர்களை இனம் கண்டு கொள்ளவும் இந்த மரபணு ஆய்வு பயன்படுகிறது. மகப்பேறு மருத்துவமனைகளில் நடை பெற்று வரும் திருட்டுத்தனமான பிள்ளைமாற்று மோசடிகளை கண்டு பிடிப்பதற்கும் இந்த ஆய்வு உதவுகிறது. குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் புலனாய்வுத் துறையினருக்கும் இந்த மரபணு சோதனை உபயோகப்படுகிறது. இப்படி எண்ணற்ற பல துறைகளுக்கு மரபணு ஆய்வு பயனுள்ளதாக விளங்குவதால் இந்த மரபணு ஆய்வுக்கு வித்திட்ட மண்டேல் என்ற அறிஞரைப் படைத்து, அவருக்கு சிந்திக்கும் திறனையும் வழங்கிய அகில உலகின் இரட்சகனாகிய அல்லாஹ்வை மருத்துவ உலகம், ஏன் இன்றைய மனித குலமே நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளது.

இறை மறையில் புதைந்துள்ள கருயியல் பற்றிய அறிவியல் உண்மைகளை அறிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நாம் இத்துறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்த மரபணு குறித்து அறிந்து கொள்வது அவசியத்திலும் அவசியமல்லா? இதோ

அது குறித்த விளக்கத்தை வாசிப்போம்.

ஒரு செல்லின் இதயம் போன்று விளங்கும் உட்கருவான நியூக்ளியஸித்திற்குள் சிறு சிறு துகள்கள் வடிவத்தில் ஏராளமான புரோட்டின்கள் உள்ளன. இது குரோமோசோம் என்று அழைக்கப்படுகிறது. இக்குரோமோசோமத்திற்குள்தான் பரம்பரை இரகசியங்களை உள்ளடக்கிய பல கோடித் தகவல்கள் பதிவு செய்யப்பட்ட செய்திக் கிடங்கு ஒன்று உள்ளது. அதனை டி. என். ஏ. (D.N.A) என்று குறிப்பிடுகிறோம். இந்த டி. என். ஏ. விற்குள்தான் வெவ்வேறு செய்திகளைக் கொண்ட (அதாவது குழந்தையின் முகம், கண், காது மூக்கு, நிறம், அதன் குணம், உயரம்... பிற உறுப்புகளின் வடிவம் எந்தெந்த வயதில் எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என்ற குறிப்புரைகளை உள்ளடக்கிய) நியூக்ளிக் அமிலங்கள், ஆங்காங்கே பல பல தொகுப்புகளாக காட்சி தருகின்றன. அதனையே ஜீன் (Gene) அல்லது மரபணு தொகுப்பு என அறிவியல் உலகம் கூறுகிறது.

குழந்தையின் முக அமைப்பு, நிறம், உயரம் போன்ற உடலின் ஒவ்வொரு பகுதியையும் உருவாக்க என தனித் தனியான மரபணுத் தொகுப்புகள் ஏராளம் உண்டு. இது வரை பல ஆயிரம் மரபணு தொகுப்புகள் இருப்பதாக சோதனையின் மூலம் உறுதி செய்யப் பட்டுள்ளது.

ஆணிடமிருந்து வெளிப்படும் விந்தணுவில் உள்ள 23 குரோமோசோம்களில் பாலினக் குரோமோசோமைத் தவிர மற்ற பண்பினக் கீற்றுக் குரோமோசோம்களான (ஆட்டோ சோம்கள்- Auto Somes) இருபத்தி இரண்டிலும், தந்தையிடம் காணப்படும் பரம்பரைத் தகவல்களான உயரம், நிறம், முக அமைப்பு, கண், காது, மூக்கு, புருவம், புருவ முடி, தலை, தலையின் முடி, அதன் அமைப்பு, நிறம், தன்மை, கை மற்றும் கால் விரல்கள், நகம், உடலமைப்பு, குணங்கள் போன்ற அனைத்து செய்திகளும் பதிவாகி இருக்கும்.

சினை முட்டையில் உள்ள 23 குரோமோசோம்களில் பாலினக் குரோமோசோமைத் தவிர பண்பினக் கீற்று குரோமோசோம்கள் இருபத்தி இரண்டிலும் தாயிடம் காணப்படும் பரம்பரைச் செய்திகள் பதிவாகி இருக்கும்.

விந்தணு மரப்பணுக்கள், சினைமுட்டையின் மரபணுக்களோடு இரண்டற இணைந்து குழந்தையின் வடிவத்தை உருவாக்குகிற போது இரு மரபணுக்களின் தொகுப்புகளும் சரி விகித்தத்தில் இணைந்திருக்குமேயானால், அப்போது பிறக்கும் குழந்தையிடம் பெற்றோர் இருவரின் சாயலும் சம அளவில் படிந்திருக்கும்.

இவ்வாறு பெற்றோர் இருவரின் சாயலும் சம அளவில் படிந்திருக்கும் ஏராளமான குழந்தைகளை நாம் நடைமுறையில் நிறையக் காணலாம்.

அவ்வாறில்லாமல், விந்தணுவில் உள்ள மரபணு தொகுப்பின் விகிதம் சினை முட்டையிலுள்ள மரபணு தொகுப்பின் விகித்தை மிகைத்து விடும் போது தந்தையின் சாயலும், சினை முட்டையிலுள்ள மரபணு தொகுப்பின் விகிதம், விந்தணுவில் காணப்படும் மரபணு தொகுப்பின் விகிதத்தை மிகைத்து விடும் போது தாயின் சாயலும் குழந்தையிடம் படிந்துவிடும்.

இருளைப் போன்ற கறுப்பான ஆண், நல்ல சிகப்பு நிறமுள்ள பெண் ஆகிய இருவரின் மூலம் ஒரு குழந்தை உருவாகிறது என்று எடுத்துக் கொள்வோம். ஆணிடமிருந்து வெளிப்படும் நிறத்தை தீர்மானிக்கும் மரபணுத் தொகுப்பில் குழந்தையின் நிறம் கறுப்பாக இருக்க வேண்டும் என்ற செய்தி பதிவு செய்யப்பட்டிருக்கும். பெண்ணிடமிருந்து வெளிப்படும் நிறத்தைத் தீர்மானிக்கும் மரபணுத் தொகுப்பில் குழந்தை வெள்ளையாக இருக்க வேண்டும் எனும் செய்தி பதிவாகி இருக்கும்.

இருவேறு நிறங்களைக் கொண்ட இந்த மரபணுத் தொகுப்புகள் இணையும் போது சம விகிதத்தில் இருந்தால், அப்போது உருவாகும் குழந்தை கறுப்பும் சிகப்பும் கலந்த மூன்றாவது ஒரு புதிய நிறத்தில் பிறக்கும்.

ஆணின் கறுப்பு நிறத்தை சுமந்து வந்த மரபணுத் தொகுப்பின் விகிதம் மிகைத்து விடும் போது, குழந்தை தனது தந்தையைப் போல் கறுப்பு நிறத்திலும், தாயின் சிகப்பு நிறத்தைச் சுமந்து வரும் மரபணுத் தொகுப்பின் விகிதம் மிகைத்து விட்டால், குழந்தை தனது தாயைப் போல சிகப்பு நிறத்திலும் பிறக்கும்.

நாம் பணி புரிந்து கொண்டிருக்கும் அரபு மண்ணில் இதற்கான உதாரணங்களை நிறையக்காணலாம். நமது நாட்டைப் பொறுத்தவரை கறுப்பான ஆணை சிகப்பு பெண் மணந்து கொள்வது, சிகப்பான ஆண் கறுப்பான பெண்ணை மணந்து கொள்வது என்பது மிகமிகக் குறைவு. மணமகன் அல்லது மணமகள் சிகப்பாக இருக்கிறாளா? என்பதுதான் மணமக்கள் ஒவ்வொருவரின் முதல் கேள்வியாக இருக்கும். ஜாதிக் கலப்பு திருமணங்கள் செய்து கொள்ள சம்மதம் தெரிவிக்கும் தம்பதிகள் கூட நிறக் கலப்பு திருமணங்கள் செய்து கொள்ள முன்வருவதில்லை. அமெரிக்க நாட்டில் தாண்டவம் ஆடும் நிறவெறி நமது இந்திய நாட்டையும் பதம் பார்த்து விட்டது என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு.

ஆனால், இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் தோலின் மேல் அமர்ந்திருக்கும் எந்த நிறத்திற்கும் எந்த முக்கியத்துவமும் இல்லை. எல்லாம் சமமான அந்தஸ்தைக் கொண்ட நிறங்களே! இந்நிறத்தை உடைய மக்கள் எல்லோரும் மண்ணின் மூலத்தில் உருவாக்கப்பட்ட மனிதர்கள்தான். உள்ளத்தில் உருவாகும் வெள்ளை நிற(இறையச்ச)த்திற்கே இஸ்லாத்தில் முதலிடம் என்பதை குர்ஆன் விளக்குகிறது. (அவரு ரெம்ப வெள்ள மனசுக்காரர் என்று சில நல்ல மனிதர்களை மக்கள் புகழ்ந்து குறிப்பிடுவதை பரவலாகக் காணலாம்.). நிற வெறிக்கு அறவே முற்று புள்ளி வைத்தது இஸ்லாம் மார்க்கம் மட்டுமே என்பதில் இரு வேறு கருத்து கொண்டவர்கள் யாரும் இல்லை.

எனவே, அரபு நாடுகளைப் பொறுத்த வரை நிறத்தால் மனிதர்களிடம் எவ்விதப் பேதமும் ஏற்படுவதில்லை. கறுப்பான ஆண் சிகப்பான பெண்ணை மணந்து கொள்வதும், சிகப்பான ஆண் கறுப்பான பெண்ணை மணந்து கொள்வதும் பரவலாக் காணப்படும் சர்வ சாதாரண நிகழ்ச்சிகளாகும். இது இஸ்லாம் ஏற்படுத்திய நிறவெறிக்கெதிரான புரட்சியின் வெளிப்பாடு. நிறத்தால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என யாரும் இல்லை என்ற அதன் சங்கநாதத்தின் புறப்பாடுதான் இந்த நிறக்கலப்பு திருமணங்கள்.

நிறக் கலப்பு திருமணம் செய்து கொண்ட

தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளில் சிலர் சிகப்பாகவும், சிலர் கறுப்பாகவும், சிலர் இரண்டும் கலந்த மூன்றாவதொரு புதிய நிறத்திலும் இருப்பதை நாம் காணலாம். ஒவ்வொரு தடவையும் குழந்தை உருவாகும் போதும் இருவரின் மரபணுக்களின் விகிதங்களில், அவைகள் இணையும் போது ஏற்படும் மாறுதலே இதற்கு காரணம். முதல் குழந்தையில் தந்தையின் மரபணுக்களின் விகிதமும், அடுத்த குழந்தையில் தாயின் மரபணுக்களின் விகிதமும் மாறி மாறி மிகைத்து விடுவதும் நடைமுறையில் உண்டு. மூன்றாவது குழந்தையில் இருவரின் மரபணு தொகுப்பும் சம விகித்திலும் இணைவதும் உண்டு. முதல் குழந்தையில் தந்தையின் மரபணு விகிதம் மிகைத்து விடுவதால், அடுத்தடுத்த குழந்தையிலும் அவ்வாறுதான் இருக்க வேண்டும் என்பது கிடையாது. தொடர்ந்து அடுத்த குழந்தைகளில் தந்தையின் மரபணுவும் மிகைக்கலாம், மாறாக தாயின் மரபணுவும் மிகைக்கலாம். இவ்வாறு, ஒருவரின் மரபணு விகிதம் இன்னொருவரின் மரபணு விகிதத்தை மிகைத்து விடும் போதுதான் மிகைத்தவரின் சாயல் குழந்தையில் படியுமே தவிர, விந்தணு, சினை முட்டை ஆகியன ஒன்றையொன்று முந்திக் கொள்வதால் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்பதே இன்றைய நவீன மருத்துவ அறிவியலாகும் எனும் போது ஒன்றை ஒன்று முந்துவதால் குழந்தையின் சாயல் தீர்மானிக்கப்படுகிறது என்ற செய்தி ஏற்கனவே கூறிய நபி மொழியில் இடம் பெற்றிருக்கிறதே, இது அறிவியல் உண்மைக்கு மாற்றமாக உள்ளதே என்று சிலருக்கு சந்தேகம் ஏற்பட வாய்புண்டு. எனவே, அதற்கான சிறு விளக்கத்தையும் காணலாம்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்...

# “நான் ஏன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன்” அப்துல்லாஹ் (டாக்டர் பெரியார்தாசன்) அவர்களின் விளக்கம்

- அபூ உமர்

நான் ஏன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன் என்ற தலைப்பில் **அப்துல்லாஹ்** என பெயர் மாற்றம் செய்துக் கொண்ட டாக்டர் பெரியார்தாசன் அவர்கள், 28.03.1431H (14.03.2010) அன்று இரவு 8.45 முதல் 9.30 வரை உரை நிகழ்த்தினார். சிறு வயதில் இந்து மத நம்பிக்கையாளராக இருந்து, பிறகு நாத்திகராக மாறி, பல ஆயிரம் பேர்களை கடவுள் மறுப்பாளர்களாக ஆவதற்கு காரணமானவர், ஒரு கட்டத்தில் முன்னால் கல்லூரி நண்பன் கேட்ட கேள்வி, **கடவுள் இருக்கிறாரா? இல்லையா?** என்பது பற்றியும் **இறந்த பிறகு நாம் எழுப்பப்படுவோமா? இல்லையா?** என்பது பற்றியும் தன்னை சிந்திக்கத் தூண்டியதாக தெரிவித்தார்.

நண்பரின் கேள்வி, மன நல நிபுணரான தன்னை, ஆழமான சிந்தனையிலும் மன உளைச்சலில் வீழ்த்தியதாக தெரிவித்தார். அதன்பிறகு சுமார் 10 ஆண்டுகளாக கடவுள் மற்றும் மறுமை தொடர்பான ஆராய்ச்சி சிந்தனையில் இருந்ததாகவும், முதலில் இந்துத்துவத்தை பற்றியும், கிருஸ்துவத்தைப் பற்றியும் ஆராய்ந்த பிறகு இறுதியாக இஸ்லாத்தைப் பற்றி படிக்க முற்பட்டதாகக் குறிப்பிட்டார். தான் பல பேர்களை கடவுள் மறுப்பாளர்களாக வளைத்துவிட்டதாகவும் அவர்களை நிமிர்த்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார். முன்பு **கடவுள் யாருமில்லை** என்று பிரச்சாரம் செய்தவர் இப்பொழுது **கடவுள் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர** என்று கூறுவதற்கான காரணங்களை கண்டறிந்துவிட்டதாக குறிப்பிட்டார். **அல்லாஹ்** முஸ்லிம்களுக்கு மட்டும் கடவுளல்ல. **அல்லாஹ்**தான் இவ்வுலகின் அனைவருக்கும் கடவுள் என்றார்.

ஒரு பக்கம் இஸ்லாமியர்கள் தன்னுடைய மாற்றத்தினால் சந்தோசமடைந்தாலும் இன்னொரு சாரார் தனக்கு எதிராக இப்பொழுதே கிளம்பிவிட்டதாகவும், டாக்டருக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய போஸ்டர் அடித்து ஒட்டப்பட்டுள்ளதாகவும், எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் அதனை சந்தோசமாக எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்

ஸனாயியா இஸ்லாமிய அழைப்பகம் மற்றும் தமிழ் தஃவா கமிட்டி இணைந்து ஒரே நாளில் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சி, ஜித்தாவின் தொழில்பேட்டையாக அறியப்பட்ட ஸனாயியா அழைப்பு மையத்தில் அதன் மேலாளர் **ஷேக் ஃபுவாத் பின் ஹாஸிம் அல் கவ்ஸர்** அவர்களின் முன்னிலையில் நடந்தது.

நிர்வாகத்திறன் பயிற்சி பட்டறை மற்றும் தமிழ் மன்ற சிறப்பு நிகழ்ச்சிகளினால் டாக்டரை அறிந்தவர்களும், முஸ்லிம், இந்து, கிருத்துவ சகோதரர்களும் சொற்பொழிவை கேட்க ஆர்வத்துடன் கூடியிருந்தனர்.

நிகழ்ச்சிக்கு சகோதரர் சாதிக் சிக்கந்தர் அவர்கள் தலைமை தாங்கினார். அழைப்பு மையத்தின் தமிழ் துறை பொறுப்பாளர் ஷேக் K.L.M.இப்ராஹீம் மதனீ அவர்களின் இறுதி சிற்றுரையோடு நிகழ்ச்சி இனிதே நடந்து முடிந்தது.

ஷேக் K . L . M .இப்ராஹீம் மதனீ அவர்கள் பேசும்போது, டாக்டர் அவர்களுடன் சேர்ந்து உம்ரா செய்யும் வாய்ப்பு நேற்று கிடைத்ததாகவும், அப்போது ஜித்தாவில் உள்ளவர்களுக்கு **நீங்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டீர்கள்** என்பதை நிகழ்ச்சி மூலம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதை ஏற்று, டாக்டர் அவர்கள் தனது ரியாத் பயணத்தை ஒத்திவைத்ததாகவும் குறிப்பிட்டார். பலபேர் ஆராய்ச்சி செய்து ஏற்றுக்கொள்ளும் இஸ்லாமிய வாழ்க்கை நெறியை, முஸ்லிம்கள் கற்று தெரிந்துக்கொள்ள வேண்டும் என்றும் முஸ்லிமல்லாத சகோதரர்கள் இஸ்லாம் சொல்லும் **கடவுள்** கோட்பாட்டினை காய்தல் உவத்தலின்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

டாக்டரின் சொற்பொழிவை இஸ்லாம்கல்வி.காம் (www.islamkalvi.com) தளத்தில் விரைவில் பார்க்கலாம் இன்ஷா அல்லாஹ்...

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 6:7

போட்டிக்குரிய கேள்விகள்

1. ஹஜ்ஜத்துல் வதாவுக்கு முன்பு யாரை தலைவராக்கி இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஹஜ் செய்ய அனுப்பி வைத்தார்கள்?
   a. அபூ பக்ர்(ரலி) அவர்களை
   b. உமர்(ரலி) அவர்களை
   c. உஸ்மான்(ரலி) அவர்களை
2. யாருடைய மனம் இம்மை வாழ்வின் (செல்வத்தின்) மீதுள்ள பிரியம் மற்றும் நீண்டநாள் வாழவேண்டும் என்ற ஆசை இவைகள் இளமையாகவே இருந்துவரும்.
   a. பணக்காரர்களின்
   b. முதியவரின்
   c. ஏழைகளின்
3. எந்த நபி தான் இறக்கும் வரை மேசையில் (அமர்ந்து) உணவருந்தியதில்லை மற்றும் மிருதுவான ரொட்டியை சாப்பிட்டதில்லை
   a. மூஸா(அலை) அவர்கள்
   b. முஹம்மது(ஸல்) அவர்கள்
   c. ஈஸா(அலை) அவர்கள்
4. குர்ஆன் அறிஞர்கள் பலர் மரணமான போர் எது?
   a. பத்ரு போர்
   b. அகழ் போர்
   c. யமாமா போர்
5. யார் பெயரை கூறி சத்தியம் செய்ய மார்க்கம் அனுமதி வழங்கியுள்ளது?
   a. தந்தையின் பெயரை
   b. தாயின் பெயரை
   c. அல்லாஹ்வின் பெயரை

அறிவுப் போட்டி - 6:6 க்கான பரிசு பெறுபவர் : முஹம்மது ஜஹ்ரான் 0508759346

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக

   Abdullah, AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## அறிவுப் போட்டி - 6:6 க்கான விடைகள்

1) b) வலப்பக்கத்தை
2) a) இரத்தங்களின் விஷயத்தில் (கொலை)
3) b) மண்ணால்
4) c) இஸ்திஃபார் செய்வதை
5) b) பெண்களை

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 35 - *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

اَللَّهُمَّ إِنِّي أَعُوْذُ بِكَ مِنَ الْبُخْلِ وَأَعُوْذُ بِكَ مِنَ الْجُبْنِ وَأَعُوْذُ بِكَ أَنْ أُرَدَّ إِلَى أَرْذَلِ الْعُمُرِ وَأَعُوْذُ بِكَ مِنْ فِتْنَةِ الدُّنْيَا وَأَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ. (بخاري)

யா அல்லாஹ்! கஞ்சத்தனத்திலிருந்து உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன், இன்னும் கோழைத்தனத்திலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன், இன்னும் தள்ளாத முதுமை வரை உயிர் வாழ்வதிலிருந்து உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன். உலகத்தின் குழப்பத்திலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன், கப்ருடைய வேதனையிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன். (புகாரி)

اَللَّهُمَّ إِنِّي أَعُوْذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ، وَالْعَجْزِ وَالْكَسَلِ، وَالْبُخْلِ وَالْجُبْنِ، وَضَلَعِ الدَّيْنِ وَغَلَبَةِ الرِّجَالِ.(بخاري)

யா அல்லாஹ்! கவலை, துயரம், இயலாமை, சோம்பல், கஞ்சத்தனம், கோழைத்தனம், கடனின் சுமை மற்றும் மனிதனின் ஆதிக்கம் அனைத்தை விட்டும் நிச்சயம் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். (புகாரி)